சுருக்கம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு சமையலர்களாக பதவி உயர்வு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2) துறை

அரசாணை (நிலை) எண்.125

நாள்.04–09–2008
திருவள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி –19

படிக்கப்பட்டது.

1. அரசாணை (நிலை) எண்.66, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 9–5–2007.
2. சமூக நல ஆணையரின் கடித எண்.14924/07/சஉதி–நி.1, நாள் 22–7–2008.

------

ஆணை.

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், சத்துணவு அமைப்பாளர் பதவிக்கு தகுதி வாய்ந்த சத்துணவு சமையலர்கள் (414 நபர்கள்) மற்றும் சமையல் உதவியாளர்கள் (396 நபர்கள்) ஆகிய 810 பணியாளர்களை ஒரு சிறப்பு நிகழ்வாக சத்துணவு அமைப்பாளர்களாக நியமனம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சமையலர்களாக பதவி உயர்வு வழங்குவது குறித்து பரிசீலித்து தனியே ஆணை வெளியிடப்படும் என ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சமூக நல ஆணையர் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க, அந்தந்த மாவட்டங்களில் உள்ள சமையலர் பதவி உயர்வுக்கு தகுதியான சமையல் உதவியாளர்களை பின்வரும் நிபந்தனையுடன் தேர்வு செய்து பதவி உயர்வு வழங்கலாம் என கருத்துரு அனுப்பியுள்ளார் :

அ) சமையல் உதவியாளர் பதவியிலிருந்து சமையலராக பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்யப்படுவோர் சமையல் உதவியாளர் பதவியில் குறைந்தது 5 வருடம் பணிபுரிந்தவராகவும், நன்கு சமைக்க தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்.

ஆ) சமையல் உதவியாளர் பதவியிலிருந்து சமையலராக பதவி உயர்வு மூலம் பணிநியமனம் செய்யப்படுவோர் மையத்திலிருந்து 10 கி.மீ சுற்றளவிற்குள் வசித்தல் வேண்டும்.

3. சமூக நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் அரசு பரிசீலனை செய்தது. அதன் அடிப்படையில், சமையல் உதவியாளர் பதவியிலிருந்து சமையலராக பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்யப்படுவோர் குறைந்தது அப்பதவியில் 5 வருடம் பணிபுரிந்தவராகவும், நன்கு சமைக்கத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்; மற்றும் சமையல் உதவியாளர் பதவியிலிருந்து சமையலராகப் பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்யப்படுவோர் அந்த சத்துணவு மையத்திலிருந்து 10 கி.மீ சுற்றளவிற்குள் வசித்தல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் அந்தந்த மாவட்டங்களிலுள்ள தகுதிவாய்ந்த சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், சமூகநலத்துறை, சென்னை–5
இயக்குநர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள்,
சென்னை–113
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மாநில கணக்காயர், சென்னை–18
தலைமை தணிக்கையர், அரசு தணிக்கைத்துறை,
செங்கல்வராயன் கட்டிடம், சென்னை–2
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
நகல்.
நிதி (சந)த் துறை, சென்னை–9
சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை (ச.ந.7 பிரிவு), சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (ச.ந.) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

**சுருக்கம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் – சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர், பணி நியமனம் – நியமன நடைமுறைகளுக்கு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉதி.2)துறை

அரசு ஆணை (நிலை) எண். 163 நாள் 18–08–2010.

திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆவணி மாதம் 2ம் நாள்

படிக்கப்பட்டது:-

1 அரசு ஆணை (நிலை) எண். 215, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் : 09.12.1988.

2 அரசு ஆணை (நிலை) எண். 918 பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத் துறை, நாள் :03.11.1989.

3 அரசு ஆணை (நிலை) எண். 112, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்: 29.04.1993.

4 அரசு ஆணை (நிலை) எண். 203, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்: 19.08.2005.

5 அரசு ஆணை (நிலை) எண். 11, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்: 22.01.2007.

6 அரசு ஆணை (நிலை) எண். 66, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்: 9.05.2007.

7 அரசு ஆணை (நிலை) எண். 19, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை நாள்: 16.02.2009.

மேலும் படிக்கப்பட்டது:-

8 மாவட்ட ஆட்சித்தலைவர் தஞ்சாவூர் அவர்களின் கடித எண். 1259/08/சஉதி.1 நாள் : 23.09.2009.

9 சமூக நல ஆணையர் அவர்களின் கடித எண். 22243/சஉதி(நி–1) 2009 நாள் : 24.03.2010.

10 அரசு ஆணை (நிலை) எண். 142, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.7) துறை நாள்: 06.07.2010.

-------

ஆணை:-

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் பணி நியமனம் குறித்து வெளியிடப்பட்ட ஆணைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டவைகளாகும். எனவே, இவற்றை ஆய்வு செய்து தற்போதைய

சூழ்நிலைககு ஏற்றவாறு மேலே 1 முதல் 7 வரையில் படிக்கப்பட்ட ஆணைகளைத் தொகுத்தும், காலத்திற்கு ஏற்ப சில மாற்றங்களை செய்தும் ஆணையிடும் பொருட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சமூக நல ஆணையர் ஆகியோர் மேலே 8 மற்றும் 9ல் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசுக்கு கருத்துருவை அனுப்பி ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

2. மேற்காணும் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதன் அடிப்படையில் சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர் நேரடி நியமனத்திற்கான கல்வித்தகுதி, வயது, தூரச்சுற்றளவு மற்றும் பிற தகுதிகள் குறித்து பின்வரும் நடைமுறைகளை பின்பற்றலாம் என முடிவெடுத்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

## சத்துணவு அமைப்பாளர்

### காலிப்பணியிடம் குறித்த விளம்பரம்

பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள காலிப்பணியிடம் குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர் / நகராட்சி ஆணையர் / மாநகராட்சி ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவரால் கல்வித்தகுதி, வயது, தூரச்சுற்றளவு மற்றும் பிற தகுதிகள் குறித்து விளம்பரம் செய்ய வேண்டும்.

காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை பெற விளம்பரப்படுத்தப்படும்போதே பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

ஊராட்சிய ஒன்றிய ஆணையர் / நகராட்சி / மாநகராட்சி ஆணையரால் பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து நேர்முகத் தேர்வு நடத்தி முழு விவரங்கள் அடங்கிய கோப்பினை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி அவர் ஒப்புதல் பெற்று பணி நியமனம் வழங்க வேண்டும்.

**நியமன அலுவலர்** – மாவட்டங்களில் – மாவட்ட ஆட்சித் தலைவர்
சென்னை மாநகராட்சி – சமூக நல ஆணையர்

### சத்துணவு அமைப்பாளர் பணிக்கான தகுதிகள்

**சத்துணவுத் திட்டத்தில் பெண்களை மட்டுமே தொடர்ந்து நியமனம் செய்ய வேண்டும்**

<u>கல்வி தகுதி.</u>

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் (ST) எட்டாவது தேர்ச்சி/தோல்வி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களுக்கு 21 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினர் (ST) 18 வயது பூர்த்தியடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ **விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர்** 20 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.

## பிற தகுதிகள்

நியமன பணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 3 கிலோ மீட்டருக்குள் இருக்க வேண்டும்.

சத்துணவு மைய கணக்குகளை தனியே பராமரிக்கும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர் பணி நியமனத்திற்கு தற்போது உள்ளவாறே மாவட்டத்தை ஒட்டுமொத்தமாக ஓர் அலகாக கொண்டு இனசுழற்சி முறை (Rule of Reservation) பின்பற்றப்பட வேண்டும். இதில் அவ்வப்போது பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை வெளியிடும் ஆணையை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர் பணிக்கான தேர்வுக்குழு ஏதும் இல்லை.

அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் 25 விழுக்காடு பணியிடங்கள் விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோரைக் கொண்டு நிரப்ப வேண்டும். (100 பணியிடங்களை நிரப்ப அனுமதிக்கும் போது அப்பணியிடங்களை பின்வருமாறு நிரப்ப வேண்டும்.

| | |
|---|---|
| பதவி உயர்வில் | – 25 |
| விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோர்களுக்கு (நேரடி நியமனம் மூலம்) | – 25 |
| மற்றவர்கள் (நேரடி நியமனம் மூலம்) | – 50 |
| | 100 |

## சமையலர் மற்றும் உதவியாளர் பணிக்கான தகுதிகள்

பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள காலிப்பணியிடம் குறித்து ஊராட்சி ஒன்றிய ஆணையர் / நகராட்சி ஆணையர் / மாநகராட்சி ஆணையர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவரால் கல்வித்தகுதி, வயது, தூரச்சுற்றளவு மற்றும் பிற தகுதிகள் குறித்து விளம்பரம் செய்ய வேண்டும்.

காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்களை பெற விளம்பரப்படுத்தப்படும்போதே பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என விளம்பரப்படுத்தப்பட வேண்டும்.

ஊராட்சிய ஒன்றிய ஆணையர் / நகராட்சி / மாநகராட்சி ஆணையரால் பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து நேர்முகத் தேர்வு நடத்தி முழு விவரங்கள் அடங்கிய கோப்பினை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) அவர்களுக்கு அனுப்பி அவர் ஒப்புதல் பெற்று பணி நியமனம் வழங்க வேண்டும்.

சமையலர் / உதவியாளர் பணியிடங்களில் பெண்களை மட்டுமே தொடர்ந்து நியமனம் செய்ய வேண்டும்.

நியமன அலுவலர் – மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சஉதி) ஆவார். (சென்னை மாநகராட்சி தவிர)

சென்னை மாநகராட்சி – சமூக நல ஆணையர்

## கல்வித் தகுதி

### பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர்

- ❖ சமையலர் – 8 ம் வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சி பெறாதவர்.
- ❖ உதவியாளர் – 5 ம் வகுப்பு தேர்ச்சி (அ) தேர்ச்சி பெறாதவர்

## பழங்குடியினர்

- ❖ சமையலர் – எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.
- ❖ உதவியாளர் – எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

## வயது

- ❖ பொதுப்பிரிவினர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் (SC) ஆகியோர்களுக்கு குறிப்பிட்ட தேதியில் 21 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ பழங்குடியினருக்கு 18 வயது பூர்த்தி அடைந்தும், 40 வயதுக்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்.
- ❖ விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டோர் 20 வயது பூர்த்தி அடைந்தும் 40 வயதிற்கு மிகாதவராகவும் இருக்க வேண்டும்

## பதவி உயர்வு

- உதவியாளர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து சமையலராக பதவி உயர்வு வழங்கலாம்.

- அனுமதிக்கப்பட்ட சத்துணவு அமைப்பாளர் காலிப்பணியிடங்களில் 25 விழுக்காடு பணியிடங்கள் சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு சத்துணவு அமைப்பாளர்களாக பதவி உயர்வு வழங்கி நிரப்ப வேண்டும். பதவி உயர்வு பெற சமையலர் பணியிடத்தில் 5 வருடங்கள் பணபுரிந்திருக்க வேண்டும் அல்லது உதவியாளராக 10 வருடங்கள் அல்லது உதவியாளர் + சமையலராக 10 வருடங்கள் பணிபுரிந்திருக்க வேண்டும்.

- அனுமதிக்கப்பட்ட சமையலர் பணியிடத்திற்கு பதவி உயர்வின் மூலம் நிரப்பப்பட்டது போக எஞ்சியுள்ள சமையலர் பணியிடத்தை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் போது 25 விழுக்காடு பணியிடங்கள் விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோரைக் கொண்டு நிரப்ப வேண்டும்.

- அனுமதிக்கப்பட்ட உதவியாளர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும் போது 25 விழுக்காடு பணியிடங்கள் விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோரைக் கொண்டு நிரப்ப வேண்டும். 100 உதவியாளர் பணியிடங்களை நிரப்ப அனுமதிக்கும் போது பின்வருமாறு நிரப்ப வேண்டும்.

| | |
|---|---|
| விதவைகள் / கணவரால் கைவிடப்பட்டோர்களுக்கு (நேரடி நியமனம் மூலம்) | – 25 |
| மற்றவர்கள் – (நேரடி நியமனம் மூலம்) | – 75 |
| | 100 |

3. மேலே பத்தி இரண்டில் சத்துணவு மைய பணியாளர் நியமனத்திற்கான தகுதிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் மேலே படிக்கப்பட்ட 1 முதல் 7 வரை மற்றும் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள பிற ஆணைகளுக்கு தேவையான அளவில் திருத்தங்கள் செய்யப்படுகிறது.

4. இவ்வாணை வெளியிடப்படும் நாளுக்கு பின்னர் சத்துணவு மைய பணியாளர் நியமனத்திற்கு விண்ணப்பங்களை வரவேற்று வெளியிடப்படும் அனைத்து விளம்பரங்களிலும் குறிப்பிடப்படும் பணியிடங்கள் இந்த ஆணையினை பின்பற்றி நியமனம் செய்யப்பட வேண்டும்.

5. சமூக நல ஆணையர் / மாவட்ட ஆட்சியர்கள் இந்த ஆணையினை கண்காணிப்பு மற்றும் ஆய்வு அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

அ. சுகுமாரன்
அரசுச்செயலாளர்

பெறுநர்

ஆணையர், சமூக நலத்துறை, சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை – 2.

நகல்

முதன்மைச் செயலாளர் / சிறப்பு ஆணையர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம், சென்னை–113.
நிதி (சமூக நலம்) துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந.7) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

ABSTRACT

Social Welfare and Nutritious Meal Programme Department – W.P.No.22255 of 2012 filed by Tmt.Venkattamma and 22 other Cook Assistants before the Hon'ble High Court of Madras – Judgement ordered dated 23-08-2012 – Promotion from the post of Cook Assistant to the post of Cook - Orders – Issued.

Social Welfare and Nutritious Meal Programme (SW4-2) Department

G.O.(Ms) No.3 Dated : 07-01-2016
திருவள்ளுவர் ஆண்டு 2046
மன்மத மார்கழி 22

Read:

1. G.O.Ms.No.125, Social Welfare and Nutritious Meal Programme (NMP2) Department, dated 04.09.2008.
2. G.O.(Ms) No.163, Social Welfare and Nutritious Meal Programme (NMP2) Department, dated : 18.08.2010
3. Hon'ble High Court of Madras Order dated 23.08.2012 in W.P.No.22255 of 2012.
4. Government Letter No.8687/SW4-2/2012-32, Social Welfare and Nutritious Meal Programme (SW4-2) Department, dated 26.11.2015.
5. From the Commissioner of Social Welfare, Roc.No.12747/ NMP.1/2012, dated 29.12.2015.

----------

ORDER :

In the Government Order, first read above, orders have been issued to provide promotion to the Cook Assistants as Cooks and Noon Meal Organisers and for Cooks as Noon Meal Organisers. The service qualification of 5 years as Cook Assistants have been fixed for promotion as Cooks and the service qualification of 5 years as Cooks or 10 years as Cook Assistants has been fixed for promotion as Noon Meal Organiser.

2) In the Government Order, second read above, among other things educational qualification of 8th standard has been fixed for the post of Cook and 5th Standard for Cook Assistant.

3) Tmt. Venkattamma and 22 others who have aggrieved over the orders issued in G.O second read above, have filed a W.P.No.22255 of 2012 in the Higher Court of Madras with a prayer to direct the respondents to promote Cook Assistants

as Cooks in the existing vacancies of Cooks and then to fill up the remaining vacancies through direct recruitment. The Hon'ble High Court of Madras vide its order dated 23.08.2012 directed the District Collector, Krishnagiri to promote all the Cook Assistants as Cooks as per the G.O. first read above and then to fill up the balance vacancies through direct recruitment. In addition, the Hon'ble Court have also directed all the other District Collectors to follow the same.

4) The Government filed a Writ Appeal No.1402 of 2013 against the above said order of the Hon'ble High Court of Madras, which is still pending before the Hon'ble Court. In the mean time, the petitioners have moved a contempt petition No.1555 of 2014 against the District Collector, Krishnagiri, for not implementing the orders of the Hon'ble High Court.

5) The Commissioner of Social Welfare in his letter fifth read above has stated that the Noon Meal Employees Associations, on various forums, have requested the Government to withdraw the Writ Appeal and promote all the Cook Assistants as Cooks by following the G.O.Ms.No.125, Social Welfare and Nutritious Meal Programme Department, dated 04.09.2008. The Commissioner of Social Welfare has further stated that, at present, there are 14,831 vacancies of cooks existing against the sanctioned posts of 42,852. Taking into consideration of the large number of vacancies, which hamper the implementation of the programme at field level, the Commissioner of Social Welfare has requested the Government to promote the Cook Assistants as Cooks by not insisting the educational qualification of 8th standard pass or fail as stipulated in G.O. second read above.

6) The Commissioner of Social Welfare has also stated that as per the reports received from the Districts, it is understood that there are about 22,802 Cook Assistants who can be promoted as Cooks by following G.O.Ms.NO.125, Social Welfare and Nutritious Meal Programme Department, dated 4.9.2008. However, as per the district reports, there are only 14,831 vacancies in the post of Cooks. Hence, the District officials shall be instructed to arrive the seniority of Cook Assistants and to promote the Cook Assistants as Cooks in the existing vacancies "AS ONE TIME AFFAIR". The balance Cook Assistants shall be promoted as Cooks as and when the vacancies arise in the respective districts until the seniority list is completed. The Commissioner of Social Welfare has further stated that whether the district officials may be requested to ensure that all the eligible cook assistants find their name in the seniority list prepared as per G.O.Ms.No.125, Social Welfare and Nutritious Meal Programme Department, dated 04.09.2008 so that none of the eligible Cook Assistants is left without promotion as Cooks, and the promoted Cooks will be given subsequent promotion as organizer only by following G.O.Ms.No.163, Social Welfare and Nutritious Meal Programme Department, dated 18.08.2010.

7) The Government after careful examination and in consultation with the Advocate General of Tamil Nadu, has decided to implement the orders of the Hon'ble High Court of Madras third read above. Accordingly, the Government direct the Commissioner of Social Welfare / District Collectors to appoint the Cook Assistants by promotion to the post of Cooks as per qualification stipulated in

G.O.Ms.No.125, Social Welfare and Nutritious Meal Programme Department, dated 04.09.2008 as "ONE TIME AFFAIR". The Commissioner of Social Welfare is also permitted to follow the procedure laid down at para 6 above.

(By Order of the Governor)

P. Sivasankaran
Principal Secretary to Government

To
The Commissioner of Social Welfare, Guindy, Chennai-32.
The Director/Mission Director, Integrated Child Development Services Scheme, Taramani, Chennai-113.
All District Collectors.
The Accountant General, Chennai-18.

Copy to:
The Finance (SW) Department, Chennai-9.
The Social Welfare and Nutritious Meal Programme (SW-7) Department Chennai-9
The Special Personal Assistant to Hon'ble Minister for Social Welfare and Nutritious Meal Programme Department, Chennai-9
SF/SC

// Forwarded by Order //

Section Officer

Commissionerate of Social Welfare,
Thiru. Vi.Ka. Industrial Estate,
Guindy, Chennai - 600 032.

Endt. No.12747 / NMP – 1 / 2012, dated 07.01.2016

Copy communicated for information and necessary action.

for Commissioner of Social Welfare

To
1) All District Collectors (Except Chennai).
2) Commissioner Chennai Corporation, Chennai - 600 003.

Copy to
1) All Personal Assistant to District Collectors (NMP) (Except Chennai)
2) Additional Educational Officer, Chennai Corporation, Chennai – 600 003.

அனுப்புநர்
திருமதி. வே. அமுதவல்லி,இ.ஆ.ப.,
சமூக நல ஆணையர், (மு.கூ.பொ)
சமூக நல ஆணையரகம்,
பனகல் மாளிகை, 2வது தளம்,
சைதாப்பேட்டை – சென்னை–15.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (சஉதி) , சென்னை மாவட்டம் நீங்கலாக.

ந.க. எண் 6206 / ச.உ.தி 1 (2) / 2022, நாள் 30.06.2023

அய்யா,

அனுப்பப்பட்டது
நாள் 4/7/23
சமூகநலத் துறை ... சென்னை-...

பொருள் – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் – சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்குதல் – தெளிவுரை கோரப்பட்டது – தொடர்பாக.

பார்வை –
1. அரசு ஆணை (நிலை) எண் 125, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.உதி 2) துறை, நாள் 14.09.2008.
2. அரசு ஆணை (நிலை) எண் 163, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.உதி 2) துறை, நாள் 18.08.2010.
3. அரசு ஆணை (நிலை) எண் 3, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.உதி 4–2) துறை, நாள் 07.01.2016.

**********

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பணியாற்றும் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்கிட கீழ்க்கண்டவாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை 1ல் காணும் அரசாணையின் படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க சமையல் உதவியாளர் நிலையிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் பணிபுரிந்தவராகவும், நன்கு சமைக்கத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். மற்றும் சமையல் உதவியாளர் நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு வழங்கப்படும் போது அந்த சத்துணவு மையத்திலிருந்து 10 கி.மீ சுற்றளவிற்குள் வசித்திட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாவட்டத்திலுள்ள தகுதியான சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் அரசாணையின் படி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளி சத்துணவு மையங்களில் பணிபுரியும் சமையல் உதவியாளர்களுக்கு தகுதியின் அடிப்படையில் தொடர்ந்து சமையலராக பதவி உயர்வு வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சமையலர் நேரடி பணிநியமனத்திற்கு கல்வித் தகுதியாக 8ம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் உதவியாளர்களுக்கு தகுதியின்

அடிப்படையில் தொடர்ந்து சமையலராக பதவி உயர்வு வழங்கலாமெனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பார்வை 3ல் காணும் அரசாணையின் படி மாவட்டங்களில் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க அரசு ஆணை (நிலை) எண் 125, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.உதி 2) துறை, நாள் 14.09.2008ல் குறிப்பிட்டுள்ளபடி, குறைந்தது 5 வருடங்கள் பணிபுரிந்தவராகவும், நன்கு சமைக்க தெரிந்தவராகவும் இருக்க வேண்டும் என்ற தகுதியின் அடிப்படையில் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே, மாவட்டங்களில் சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வு வழங்கிட கல்வித்தகுதியினை கருதாமல், அரசு ஆணை (நிலை) எண் 125, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் (ச.உதி 2) துறை, நாள் 14.09.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை பின்பற்றி சமையல் உதவியாளர்களுக்கு சமையலராக பதவி உயர்வை தொடர்ந்து வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- வே. அமுதவல்லி
சமூகநல ஆணையர் (மு.கூ.பொ)

பெறுநர்

அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களின்
நேர்முக உதவியாளர்கள் (ச.உ.தி)
அனைத்து மாவட்டங்கள்.

// ஆணைப்படி //

03/07/23
சமூக நல ஆணையருக்காக.

3/07/23